## திண்டுக்கல் லியோனியின் குரல், ஒலிக்கத் தொடங்கிய, 50-ஆம் ஆண்டு விழா:

# தமிழ் - நகைச்சுவையில் சிம்மாசனம் போட்டு அமர்ந்திருக்கும் திண்டுக்கல் லியோனியின் தமிழ்ப்பணி தொடரட்டும்!

## சென்னை கலைவாணர் அரங்கில், நடைபெற்ற விழாவில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வாழ்த்துரை!

**சென்னை, பிப்.1–**

**சென்னை, கலைவாணர் அரங்கில், 'நகைச்சுவைத் தென்றல்' திண்டுக்கல் லியோனியின் குரல், தமிழ்நாட்டில் ஒலிக்கத் தொடங்கி, 50 ஆண்டுகள் ஆவதைக் கொண்டாடும் வகையில்,நேற்று மாலை நடைபெற்ற விழாவில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பங்கேற்று வாழ்த்திப் பேசினார்.**

அப்போது அவர் "தமிழுக்கும் நகைச்சுவைக்கும் சிம்மாசனம் போட்டு, அமர்ந்திருக்கும் அண்ணன் லியோனி அவர்களின் தமிழ்ப்பணி தொடரட்டும். வரவிருக்கும் சட்டமன்றத் தேர்தலிலும் கழகத்தின் சாதனைகளை மக்களிடம் கொண்டு சேர்க்கும் கடமையை, அவர் சிறப்பாகச் செய்யட்டும்" என்று குறிப்பிட்டார்.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய வாழ்த்துரை வருமாறு:

50 ஆண்டுகால பட்டிமன்ற நினைவுகளைப் பெருமைப்படுத்தும் வகையில், இந்த நிகழ்ச்சியைச் சிறப்பாக ஏற்பாடு செய்துள்ள அண்ணன் லியோனி அவர்களின் மகன் சிவா அவர்களையும், அவரின் குடும்பத்தினரையும், ரசிகர்களையும் மனதார வாழ்த்துகிறேன். அமைச்சர் அண்ணன் சேகர் பாபு, இங்கே வாழ்த்திய கவிஞர் சகோதரர் சினேகன், கவிஞர் கார்த்திக் மற்றும் வருகை தந்துள்ள அனைவருக்கும் வணக்கம். முதலில் அண்ணன் லியோனி அவர்களுக்கு என்னுடைய நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**லியோனியின் ரசிகன்**

இன்று இந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்வது என்னுடைய கடமை என்ற உணர்வுடன் வந்திருக்கிறேன். ஏனென்றால், இங்கே நான் ஒரு சட்டமன்ற உறுப்பினராகவோ, விளையாட்டுத் துறை அமைச்சராகவோ அல்லது துணை முதலமைச்சராகவோ கலந்து கொள்ளவில்லை; அண்ணன் லியோனியின் ஒரு ரசிகனாகவே பங்கேற்றுள்ளேன்.

1996-ஆம் ஆண்டு, சரியாக 30 ஆண்டுகளுக்கு முன்பு, லியோனி



அண்ணனின் பட்டிமன்றப் பேச்சுகள் மிகவும் புகழ்பெற்றிருந்த காலம். அப்போது நாங்கள் கழகத் தலைவர் தந்தையாருடன் வேளச்சேரி, டாக்டர் சீதாபதி நகரில் வசித்து வந்தோம். ஒவ்வொரு ஆண்டும் பொங்கல் விழாவின் போது, தலைவர் அவர்கள் அந்தப் பகுதி குடியிருப்போர் சங்கத்திற்கு ஒரு ஆலோசகர் போல இருந்து அனைத்து நிகழ்ச்சிகளையும் முன்னின்று நடத்துவார்.

**மறக்க முடியாது**

விளையாட்டுப் போட்டிகள், கோலப் போட்டிகள் எனப் பல நிகழ்ச்சிகள் திட்டமிடப்பட்ட போது, 1996-இல் அங்கிருந்தவர்களும் நானும் தலைவரிடம் சென்று, ``திண்டுக்கல் லியோனி என்று ஒருவர், பட்டிமன்றத்தில் மிகவும் சிறப்பாகப் பேசுகிறார், அவரை ஏன் நாம் அழைக்கக் கூடாது?" என்று கேட்டோம். தலைவர் அவர்களும் சம்மதித்து அவரை அழைத்தார். அவர் வந்த அன்று, ஒட்டுமொத்த வேளச்சேரி, சீதாபதி நகரமே ஒரு மிகப்பெரிய திருவிழாக் கோலம் பூண்டிருந்தது. அந்த நிகழ்ச்சியை என்னால் இப்போதும் மறக்க முடியாது.

அன்று தொடங்கிய எங்களது நட்பு, தலைமுறை கடந்த ஒரு பந்தம். என் தந்தை அண்ணனின் பேச்சை விரும்பி ரசிப்பார். அவருக்கு அண்ணன் மூன்று முத்தங்கள் கொடுத்ததாகக் கூறினார், இப்போது நான் அந்தப் பாசத்தைப் பெற்றுக்கொண்டேன். அவருக்கு அடுத்த தலைமுறையினரான யூடியூப் மற்றும் ரீல்ஸ் வாசிகள் வரை அண்ணன் இன்று புகழ்பெற்று விளங்குகிறார். இன்னும் சொல்லப்போனால், இங்கே வந்திருக்கும் தம்பி சுதாகர், கோபி போன்ற இளம் கலைஞர்களுக்கே அவர் சவால் விடுகிறார். தன்னைத் தானே காலத்திற்கேற்ப புதுப்பித்துக் கொள்வதில் அண்ணன் லியோனி ஒரு தனித்தன்மை வாய்ந்தவர்.

**கலைஞரின் பவள விழா**

அண்ணன் குறிப்பிட்டது போல, அவர் பெற்ற மூன்று முத்தங்களில் முதல் முத்தம் கலைஞர் அவர்களின் பவள விழாவின் போது கிடைத்தது. அப்போது பட்டிமன்றம் பேசி முடித்த பின், கலைஞர் வராதது குறித்து என் தந்தையிடம் அண்ணன் கேட்டார். அதற்குத் தலைவர், ``அவர் அப்போதே வந்துவிட்டார். அவர் உள்ளே வந்தால் உங்கள் பேச்சுக்கு இடையூறு ஏற்படும் என்று கருதி, பக்கத்து அறையில் அமர்ந்து ஆடியோ மூலம் உங்கள் பேச்சை ரசித்துக் கொண்டிருந்தார்'' என்றார். கலைஞர், பேராசிரியர் போன்றோர் தன் பேச்சை ரசித்ததை அறிந்து, அவர் நெகிழ்ந்து போனார்.

**முன்கள வீரர்**

அன்று அந்த நிகழ்ச்சியை என் தந்தை இளைஞர் அணிச் செயலாளராக இருந்து நடத்தினார். இன்று நான் அதே இளைஞர் அணிச் செயலாளராக இந்த நிகழ்ச்சியில் கலந்துகொள்வதில் பெருமை கொள்கிறேன். அண்ணன் லியோனி அவர்கள் பட்டிமன்றங்கள் வழியாக நகைச்சுவையை வழங்குவது ஒருபுறம் இருந்தாலும், கழகத்தின் கொள்கைகளை மக்களிடம் கொண்டு சேர்ப்பதில் ஒரு முன்கள வீரராகச் செயல்படுகிறார்.

இளைஞர் அணி நடத்தும் `அறிவுத் திருவிழா' முதல் பல நிகழ்வுகளில் அவரின் பங்களிப்பு மகத்தானது. குறிப்பாக, கொரோனா பேரிடர் தொடங்குவதற்கு முன்பு தஞ்சாவூரில் நாங்கள் நடத்திய `பொய்ப்பெட்டி' நிகழ்ச்சியில் அவர் ஆற்றிய உரை இன்றும் நினைவில் உள்ளது. அதேபோல, தமிழகம் முழுவதும் பயணம் செய்து சிறந்த இளம் பேச்சாளர்களைத் தேர்வு செய்ய, அவர் எங்களுக்குப் பேருதவி புரிந்தார். அதற்கு இந்த மேடையில் அவருக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**வளர்ந்த கதை சொல்லவா?**

அவருடைய `வளர்ந்த கதை சொல்லவா?' என்ற நூலில், கலைஞருடன் அவருக்கு ஏற்பட்ட முதல் தொடர்பு பற்றி நெகிழ்ச்சியாகக் குறிப்பிட்டுள்ளார். நெல்லைப் பகுதியில் ஒரு நபர், இவரை ஏமாற்றிய செய்தியைப் பார்த்துவிட்டு, கலைஞர் அவர்களே தொலைபேசியில் அழைத்து நலம் விசாரித்துள்ளார். தமிழ்தான் அவர்கள் இருவரையும் இணைத்தது.

தமிழுக்கும் நகைச்சுவைக்கும் சிம்மாசனம் போட்டு, அமர்ந்திருக்கும் அண்ணன் லியோனி அவர்களின் தமிழ்ப்பணி தொடரட்டும். வரவிருக்கும் சட்டமன்றத் தேர்தலிலும் கழகத்தின் சாதனைகளை மக்களிடம் கொண்டு சேர்க்கும் கடமையை, அவர் சிறப்பாகச் செய்வார் என்ற நம்பிக்கையோடு, இந்த இனிய வாய்ப்பிற்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வாழ்த்திப் பேசினார்.



விழுப்புரம் மாவட்டம் செஞ்சி அடுத்த விநாயகபுரம் அஞ்சலை அம்மாள் நர்சிங் சமுதாய கல்லூரியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர், முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு கல்லூரி மாணவிகளுக்கு மடிக்கணினியை வழங்கினார். உடன் செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலிமஸ்தான், கல்லூரி தாளாளர் சிவக்குமார் ஆகியோர் உள்ளனர்.

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

# "அன்னம் தரும் அமுதகரம்" 345வது நாள்!

## அம்பத்தூர் கிழக்கு பகுதியில் உணவு வழங்கப்பட்டது!

*சென்னை, பிப். 1-*

*தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு "அன்னம் தரும் அமுதக்கரங்கள்" மாபெரும் திட்டத்தின் 345 ஆம் நாளான - கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்தநாளை முன்னிட்டு நேற்று (30.01.2026), அம்பத்தூர் கிழக்கு பகுதி: 1) வட்டம் 82 அ, கள்ளிகுப்பம் ஆர்ச் அருகில், 2) வட்டம் 82, 20B பஸ் நிலையம் அருகில், மேனாம்பேடு, ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்களின் வழிகாட்டுதல்படி தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தர மாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக் காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!" என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கப்பட்டது.*





*இந்நிகழ்ச்சியில் ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ, பி.கே.மூர்த்தி. எம்.சி, எம்.டி.ஆர். நாகராஜ், டி.எஸ்.பி.ராஜகோபால் எம்.சி , டாக்டர்.ஜி சாந்தகுமாரி எம்.சி, எல்.பி.எஃப்.மோகன், டாக்டர் பூர்ணிமா எம்.சி, ரமேஷ் என்ற நீலகண்டன் எம்.சி து.ஆயிரம், ஜி.வி.நாகவள்ளி எம்.சி, கு.கிருஷ்ணமூர்த்தி அம்பத்தூர்/ கிழக்கு வடக்கு/தெற்கு/ வட்ட கழக செயலாளர்கள்: மு.சண்முகம், ஆ.சுந்தரராஜ், லோகநாதன், சு.மோகன்குமார், மு.விஜயகுமார், த.வ.லால் பி.செந்தில். வி.ரவிந்திரன், பு.வீரா(எ) வீரராகவன், வெ.ராதாகிருஷ்ணன், த.கண்ணபிரான், எம்.கமல் எம்.சி, டி.பிரகாஷ் தயாளன், சி. சீனிவாசன், எம்.ஈ.சேகர் எம்.சி, நா.நெப்போலியன், ஆர்.டீக்கா, ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, எஸ்.முரளி, பெரம்பூர் ஆர்.ராஜன், கே.ஆர்.அபரஞ்சி, அசோக் ஜெயின், பி.விஜயகுமார், ம.அசோக்குமார், எல். சம்பத்குமார், க.பா.பிரதீப்குமார் மற்றும் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.*

## தி.மு.கழகத்தின் சார்பில் திராவிட மாடல் அரசின் சாதனைகளையும் ஒன்றிய அரசின் வஞ்சகத்தையும் மக்களிடம் எடுத்துச் சொல்லும் வகையில்

# தமிழ்நாடு முழுவதும் "தமிழ்நாடு தலைகுனியாது" - 22 முன்னணி பேச்சாளர்களின் பரப்புரைப் பயணம்!

## டி.கே.எஸ்.இளங்கோவன் – நா.எழிலன் – கனிமொழி என்.வி.என்.சோமு செய்தி வெளியீடு!

*சென்னை, பிப்.1-*

*தி.மு. கழகத்தின் சார்பில் திராவிட மாடல் அரசின் சாதனைகளையும் ஒன்றிய அரசின் வஞ்சகத்தையும் மக்களிடம் எடுத்துச் சொல்லும் வகையில் தமிழ்நாடு முழுவதும் 'தமிழ்நாடு தலைகுனியாது' பரப்புரைப் பயணம்! ★234 சட்டமன்றத் தொகுதிகளிலும் கழகத்தைச் சேர்ந்த 22 முன்னணி பேச்சாளர்கள் பரப்புரை மேற்கொள்கின்றனர் என கழகச் செய்தித் தொடர்பு தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன், சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் நா. எழிலன், நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி என்.வீ.என்.சோமு ஆகியோர் நேற்று (31.01.2026) சென்னை அண்ணா அறிவாலயத்தில் செய்தியாளர்களைச் சந்தித்தது குறித்த செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளனர்.*

*தமிழ்நாட்டில் இருக்கும் 234 சட்டமன்ற தொகுதிகளுக்கும் சென்று மக்களை சந்தித்து மக்களோடு இருந்து இதுவரை கழகத் தலைவர் மாண்புமிகுதமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான அரசு தமிழ்நாட்டு மக்களுக்கு என்னென்ன நலத் திட்டங்களைக் கொண்டு வந்திருக்கிறது என்பதை எடுத்துச் சொல்வதற்காக 'தமிழ்நாடு தலைகுனியாது' பரப்புரைப் பயணத்தைத் தலைமை கழகம் அறிவித்திருக்கிறது.*

*மக்களுடன் இருந்து மக்களோடு வாழ்ந்து மக்களுடைய வீடுகளிலேயே உணவருந்தி அவர்களுக்கு செய்திருக்கின்ற திட்டங்களை விளக்கமாக சொல்லி, திராவிட முன்னேற்ற கழகத்தின் மீது சொல்லப்படுகிற குற்றச்சாட்டுகளைக் களையெடுப்பதற்காக இந்தப் பரப்புரைத் திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது.*

*பொதுவாக 2021 ஆம் ஆண்டு கழக அரசு அமைந்த பிறகு மாண்புமிகு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான ஆட்சி, அனைத்துதரப்பு மக்களுக்கும் பல்வேறு நலத்திட்டங்களை வழங்கி இருக்கிறது. குறிப்பாக கல்வி, மருத்துவம், மகளிர் முன்னேற்றம் ஆகிய மூன்று துறைகளில் அனைத்து மக்களுக்குமான பல நல்ல திட்டங்களை வழங்கி இருக்கிறது.*

*பள்ளிகளில் இடைநிற்றலை தடுக்கும் வகையில் காலை உணவு திட்டத்தை அறிமுகப்படுத்தியவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள். காலையில் பிள்ளைகளுக்கு உணவு தயாரித்துக் கொடுக்க சிரமப்படுகிற நிலையை மாற்றும் வகையில் மாணவர்களுக்கு பள்ளிக்கூடத்திலேயே காலை உணவை வழங்கி வருகிறார். இதன் மூலம் இடைநிற்றல் தடுக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் உள்ள எல்லோரும் கல்வி கற்க வேண்டும் என்ற ஒற்றை நோக்கத்தில் இந்த திட்டத்தை முதலமைச்சர் அறிவித்திருக்கிறார்.*

*பல்வேறு பணிகளுக்கு செல்கிற பெண்களுக்குக் கிடைக்கிற ஊதியம் குறைவாக இருக்கும் அதே நேரத்தில் அவர்கள் பயணிக்க வேண்டிய தூரம் அதிகமாக இருக்கும். இது போன்ற நிலையில் பெண்களுக்கு சிரமம் ஏற்படும். இதை தடுப்பதற்காக விடியல் பயணம் என்ற பெயரில் தமிழ்நாட்டு பெண்கள் தங்களுடைய பணிக்குக் கட்டணமின்றி சென்று வருவதற்கான திட்டத்தை அறிவித்தார்.*

*பெண்கள் பொதுவாக தங்களுடைய தேவைகளுக்காக தங்களுடைய கணவரையோ, பிள்ளைகளையோ நம்பி இருக்க வேண்டிய சூழ்நிலை இருந்தது. அதை தடுப்பதற்காக அவர்களுடைய சுய தேவைகளுக்காக மாதம் தோறும் ரூ.1000 வழங்கும் 'கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தையும்' முதலமைச்சர் அறிவித்து செயல்படுத்தி வருகிறார்.*

*மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை பெற முடியாதவர்களுக்கு 'இல்லம் தேடி மருத்துவம்' என்ற திட்டத்தை அறிமுகப்படுத்தி அவர்கள் வீட்டுக்கே மருத்துவ உதவியை வழங்கக்கூடிய திட்டத்தையும் அறிவித்து அதுவும் நடைமுறையில் இருக்கிறது.*

*இப்படி அனைத்து தரப்பிலும் முக்கியமாக கல்வி, மருத்துவம், பெண்கள் முன்னேற்றம் உள்ளிட்ட துறைகளில் பல சீரிய திட்டங்களை கழக அரசு வழங்கி வருகிறது.*

*ஆனால், இதற்கு உரிய ஒத்துழைப்பை, ஒன்றிய அரசு வழங்குகிறதா என்றால் இல்லை. குறிப்பாக மாநில அரசுகளின் மிகப்பெரிய நிதி வருவாய் என்பது விற்பனை வரியின் மூலம் காலங்காலமாக கிடைத்து வந்தது. ஆனால் இந்த பாஜக அரசு விற்பனை வரி என்பதையே நிறுத்திவிட்டு ஜிஎஸ்டி என்ற பெயரில் அதிகாரத்தை எடுத்துக் கொண்டு, அதிலிருந்து வரும் வருவாயை மாநிலங்களுக்கு பகிர்ந்து அளிக்கிறது.*

*நேரடியாக மக்களுக்கு செய்ய வேண்டிய பல திட்டங்களை மாநில அரசுதான் செய்ய வேண்டும். கல்வி, மருத்துவ வசதி, வீடு வழங்குதல், உணவு வழங்குதல், பெண்கள் முன்னேற்றம் போன்ற திட்டங்களை எல்லாம் செய்கிற அதிகாரம் இந்திய அரசியலமைப்பு சட்டப்படி மாநில அரசின் பட்டியலில் இருக்கிறது.*

*ஆனால் ஒன்றிய அரசுக்கு வெளியுறவு, படைகளை நடத்துவது, விமானம் செலுத்துவது இது போன்ற துறைகளின் அதிகாரம்தான் இருக்கிறது. நேரடியாக மக்களுக்கு திட்டமிட்டு நிறைவேற்ற வேண்டிய பொறுப்பில் இருக்கிற மாநில அரசுக்கு நிதி தராமல் வஞ்சிக்கிறது ஒன்றிய அரசு; எதை கேட்டாலும் தர முடியாது என்கிறது.*

*எங்களுடைய திட்டத்துக்கு கட்டுப்பட்டால்தான் எங்களுடைய கொள்கைகளை ஏற்றுக்கொண்டால்தான் நாங்கள் நிதி தருவோம் என்று ஒரு அமைச்சரே வந்து இங்கே சொல்லி இருக்கிறார்; இல்லையென்றால் தரமாட்டோம் என்று சொல்லி இருக்கிறார்; மாநிலங்களை வஞ்சிக்கிறார்.*

*இப்படிப்பட்ட அரசு ஒன்றியத்தில் இருக்கும் பொழுது இதையும் மீறி தமிழ்நாட்டு மக்கள்தான் முக்கியம் என்ற அளவில் தமிழ்நாடு அரசை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சிறப்பாக நடத்திச் செல்கிறார். ஒன்றிய அரசு துரோகம் செய்கிற அரசாக இருக்கிறது. ஒரு நாட்டின் பிரதமரே இங்கு வந்து எய்ம்ஸ் என்ற ஒரு மருத்துவ கல்லூரியை கட்டுவதற்கு அடிக்கல் நாட்டினார்; இன்றுவரை எய்ம்ஸ் மருத்துவமனை வரவில்லை. மருத்துவ கல்லூரி வரவில்லை என்றால் யாரை ஏமாற்ற பிரதமர் இங்கு வருகிறார் என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.*

*பிரதமர் எப்பொழுது வந்தாலும் மக்கள் இவர் இந்த முறை எதை சொல்லி ஏமாற்ற போகிறாரோ என்கிற எண்ணத்தில் இருக்கிறார்கள். அந்த அளவுக்கு ஒன்றிய அரசு தமிழ்நாட்டின் மீது தங்களுடைய வெறுப்பை காட்டுகிறது. தமிழர்களின் பெருமையை சொல்லக்கூடிய தமிழர்களின் தொன்மையை சொல்லக்கூடிய கீழடி ஆய்வை ஏற்றுக் கொள்ள மறுக்கிறார்கள். தமிழ்நாட்டுக்கு என்று எந்த திட்டத்தையும் வழங்குவதில்லை.*

*தமிழ்நாட்டுக்கு ரயில்வேயில் இவ்வளவு தந்தோம் என்று சொல்கிறார்கள். ராமேஸ்வரம் ரயில் நிலையத்தை புனரமைப்பதற்கு எட்டு கோடி ரூபாய் ஒதுக்கினார்கள். காசி ரயில்நிலையத்தை புனரமைப்பதற்கு 100 கோடி ரூபாய் ஒதுக்கி இருக்கிறார்கள். இப்படி தமிழ்நாட்டுக்கு என்றால் ஒரு வகையிலும் வட மாநிலங்களுக்கு என்றால் ஒரு வகையிலும் செயல்படுகிற அரசாக ஒன்றிய அரசு இருக்கிறது.*

*இந்த பாஜக அரசு தமிழ்நாட்டை திட்டமிட்டு புறக்கணிக்கிறது. மதக் கலவரங்களை ஏற்படுத்துகிறது. அரசியலமைப்பு சட்டத்தை மீறுகிறது. இந்திய அரசியலமைப்பு சட்டம் பிரிவு 25, மனசாட்சிப்படி நடந்து கொள்ளும் உரிமை, எந்த மதத்தையும் பின்பற்றுவதற்கான உரிமை இவற்றை வழங்கி இருக்கிறது. அது அடிப்படை உரிமை. ஆனால் அதை மீறி இந்த நாட்டை மதவாத நாடாக மாற்றும் முயற்சியில் ஒன்றிய அரசு இருக்கிறது. இது போன்ற விஷயங்களில் தேவையில்லாத குழப்பத்தை உருவாக்குகிற அரசாக, மக்களிடம் அமைதியையும் ஒற்றுமையையும் குலைக்கிற அரசாக ஒன்றிய அரசு இருக்கிறது.*

*இது போன்ற ஒன்றிய அரசு தமிழ்நாட்டுக்கு இழைக்கும் அநீதிகளுக்கு எதிரான பிரச்சாரத்தையும் எங்களுடைய சாதனைகளை குறித்த பிரச்சாரத்தையும் எங்களுடைய கழகத்தின் முன்னணி சொற்பொழிவாளர்கள் 22 பேர் தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களுக்கும் தொகுதிவாரியாக சென்று மக்களிடையே எடுத்து சொல்ல இருக்கிறார்கள்.*

*அதற்காக 'தமிழ்நாடு தலைகுனியாது' என்ற தலைப்பிலே இந்த பிரச்சார பயணம் இன்று முதல் (01.02.2026) தொடங்குகிறது.*